<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 239/2015 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 14 P.W. 6 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகையன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 25.03.2026.

<u>எதிரி ஆஜர்</u>

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோயம்புத்துார் மாவட்டம் காரமடை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு உடுமலை காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 24.09.2011 ம் தேதியன்று இரவு 20.45 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது வசந்தா என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்து எழுத்துமூலமான புகாரை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண். 2457/2011 ச/பி 392 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் கனகராஜ் என்பவரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. பின்னர் காவல் ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவக்குமார் மற்றும் ரவிசந்தர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்து கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார்.
2. பின்னர் சாட்சிகள் வசந்தா, சுந்தரம், பழனியம்மாள், அருள்ஜோதி, ஆனந்த்

ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரி புருசோத்தமன் என்பவர் பெருந்துறை காவல்நிலைய குற்ற எண் சிறைவாசியாக இருந்ததால் PT வாரண்ட் மூலம் அஜர் படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் வழக்கின் முதற் கட்ட புலன் விசாரணையான கனகராஜ் அவர்கள் பணி மாறுதல் ஆகி விட்டதால் மேற்படி வழக்கு கோப்பை நான் கடந்த 31.07.2013 ம் தேதி நான் அதிகாலை 3.30 மணியளவில் உடுமலை – தாராபுரம் ரோடு காந்தி நகர் பேஸ் –2 ரங்கநாதன் திருமண மண்டபம் அருகில் வாகனதணிக்கை செய்து கொண்டிருந்த போது இவ்வழக்கின் 2 ம் எதிரியான மாதவன் (எ) கண்ணன் என்பவர் அவ்வழியாக வந்தவரை விசாரித்து மேற்படி உடுமலை காவல் 2457/2011 வழககில் தான் சம்பந்தப்பட்டிருந்ததை அவரை விசாரித்து போது கூறியதை மேற்படி நபரை அதிகாலை 3.40 மணிக்கு கைது செய்து மேற்படி நபர் அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பொது நபர்கள் யாரும் இல்லாதததால் என்னுடன் வந்த போலிசார்கள் துளசிராம் மற்றும் ரங்கநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதவன் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தன்னுடன் வந்த எதிரி புருசோத்தமன் என்பவர் குற்ற சம்பவத்தில் கிடைத்த தங்க செயினை பழனீயில் உள்ள அம்பிகா நகை கடையில் அடகு வைத்து ரூ . 1,25,000/– ல் அவர் பங்கு 50000/– ல் எதிரி மாதவன் என்பவர் ஒரு செல்போன் வாங்கியதாகவும், மேற்படி செல்போனை ஆஜர் படுத்தியதாகவும், மேலும் பழனியில் உள்ள அம்பிகா நகை கடையை காண்பித்தததாகவும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சி கையொப்பம் பெற்றேன்.

3. பின்னர் செல்போன் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்னர் பழனி சென்று அம்பிகா நகை அடகு கடை பற்றி விசாரித்த போது அங்கு சரியான தகவல்இல்லை என்பதாலும் அவரும் அடையாளம் காண்பிக்கவில்லை என்பதாலும் சரியான விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. பின்பு சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்ட G Five மாடல் செல்போன் –1, 2 ஏர் செல் சிம் உடன் பிரவுன் கலர் பேட்டரியுடன் கூடியதை கைப்பற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ. 7 என குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு ஆஜர் செய்தேன். **படிவம் 91 அசா.ஆ. 8 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் எதிரியை வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி எதிரியை நீதிமன்ற காவலுக்காக பாராக காவல் வசம் ஒப்பிவித்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணி என்பவரை விசாரத்தும் மற்றும் முதற் கட்ட புலன் விசாரணை செய்த

காவல் ஆய்வாளர் கனகராஜ் தயாரித்த ஆவணங்களை பார்த்தும் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தனது தரப்பில் தானே குறுக்கு விசாரணை செய்தார்</u>**

1. நீங்கள் தாக்கல் செய்த குற்ற அறிக்கையில் சம்பவ இடத்தில் இருந்த வண்டி எண் மற்றும் கலர் குறித்து சொல்லவில்லை என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் எந்த வண்டியையும் கைப்பற்றவில்லை என்றால் வழக்கு சொத்துக்களையும் குற்ற செயலில் பயன்படுத்திய வாகனம் குறித்து எதிரிகள் இருவரும் புலன் விசாரணையில் கூறவில்லை என்பதாலும் விசாரணைக்கு சரியாக ஒத்துழைக்காததாலும் கைப்பற்ற இயலவில்லை. வழக்கு சம்பந்தப்பட்ட 12 ½ பவுன் நகையையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான், நகையை அடகு வைத்த கடை பற்றி தகவல் சரியாக விசாரணையில் சொல்லாமல் போலிசாரை அலைகழித்தனர்.
2. ஆஜர் எதிரி புருசோத்தமன் மீது சிறையில் உள்ள காலத்தில் அவர்மீதும் அவர் அப்பா மீதும் ஏற்கனவே நகை திருட்டு சம்பந்தமாக CC 100/2016 குற்ற எண் 95/2013 என்ற வழக்கு போட்டுள்ளிர்கள் என்றால் சரிதான்.
3. பொய் வழக்கு போட்டுள்ளிர்கள் என்றால் அப்பா செல்வராஜ் கைது செய்யப்பட்ட போது அவர் விசாரணையில் அவர் உடன் வந்தவர்கள் பற்றிசொன்ன வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்த வழககின் விசாரணை அதிகாரி ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்று வழக்கின் விசாரணையின் போது தெரியவந்தது. ஆஜர் எதிரியின் குடும்பத்தில் உள்ள அனைவரும் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளிலும் உடன் வந்தததாக சொல்லும் எதிரிகளை பற்றி சொல்லும் போது சிறையில் உள்ள எதிரிகளை சொல்வது வழக்கமாக உள்ளது. ஒரே குடும்பத்தில் உள்ள இவர்கள் தங்களது விசாரணையில் தங்கள் உடன் வந்தவர்கள் பற்றி உண்மைக்கு புறம்பாக சிறையில் உள்ள வர்கள் பற்றி சொல்லி குழப்பி பொய்யாக சொல்லி நீதிமன்ற அடைப்பிற்கு செல்வது வழக்கம். அதன் பின் விசாரித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
4. முதல் தகவல் அறிககை போடும் போது சரியாக விசாரிக்காமல் போட்டுள்ளிர்கள் என்றாலும் பணியில் இருந்து தவறியுள்ளிர்கள் என்றால் சரியல்ல, பிடிக்க கூடிய குற்றம், புகாராக வரும் போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர் விசாரிப்பது வழக்கம்.
5. மேற்படி ஆண்டு பட்டிகை வழக்கு 100/2016 விடுதலை

செய்யப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். உங்கள் குடும்பத்தில் தகப்பனார் தண்டனையும் பெற்றுள்ளார். தண்டனை பெற்றதற்கான ஆவணம் உள்ளதா என்றால் பொள்ளாச்சி வழக்கில். என்ன வழக்கு எண் மற்றும் குற்ற எண் என்ன என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல இயலும்.

6. வழக்கின் குற்ற அறிக்கையின் நகையின் மாடல் வடிவம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான், தாலிக் கொடி என்று குறிப்பிட்டுள்ளோம். வழக்கில் சம்பந்தப்பட்ட நகை தாலி கொடியா அல்லது செயினா என்றால் கொடி என்பது தமிழ் வார்த்தை செயின் என்பது ஆங்கில வார்த்தை. செயின் மற்றும் கொடி வேறு வேறு என்றால் மாடலை பொறுத்து வேறுபடும். ஆஜர் எதிரி புருசோத்தமன் மற்றும் அவரது தந்தை செல்வராஜ் மீதும் ஏற்கனவே இருந்த அலுவலர்களுக்கு முன் பிரச்சனைகள் இருந்ததால் அவர்கள் மீது பொய் வழக்கு போட்டு வருகிறீர்கள் என்றால் சரியல்ல.
7. இந்த வழக்கின் புகார்தாரர்களையும் சாட்சிகளையும் விசாரித்தீர்களா என்றால் புகார்தாரரை நான் விசாரித்துள்ளேன். மற்ற சாட்சிகளை எனக்கு முன்னால் இருந்த காவல் ஆய்வாளர் விசாரித்தார். புகார்தாரரை எங்கே எந்த தேதியில் வைத்து எவ்வளவு நேரம் விசாரித்தீர்கள் என்றால் 31.07.2013 ம் தேதி மதியத்திற்குமேல் மாலைக்குள் விசாரித்துள்ளேன், சரியான நேரம் தெரியவில்லை.
8. கைப்பற்றுதல் மகஜர் சாட்சியில் உங்களுக்கு கீழ் நிலையில் உள்ள போலீசார் சாட்சியாக பயன்படுத்தியுள்ளீர்கள் என்றால் அதிகாலை 3.30 மணி என்பதால் பொது நபர்கள் இல்லாததால் போலிசாரை சாட்சியாக விசாரித்தேன். நீங்கள் பதிவு செய்த குற்ற அறிக்கையில் தேதியும் மாதமும் திருத்தப்பட்டுள்ளது என்றால் குற்ற அறிக்கை படிவத்தில் முன் பகுதியில் மட்டும் திருத்தப்பட்டுள்ளது.
9. இந்த வழக்கு சம்பந்தமாக எதிரியின் தாயார் மற்றும் தகப்பனாரை உடுமலை காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக அடைத்து வைத்திருந்தீர்கள் என்றால் சரியல்ல, ஆஜர் எதிரி புருஷோத்தமனை ஆய்வாளர் திரு கனகராஜ் அவர்கள் ஆஜர் எதிரி பெருந்துறை வழக்கில் காவலில் இருந்த சமயம் PT வாரன்ட் மூலம் போலீஸ் காவலில் எடுத்து விசாரணை செய்துள்ளார், எனவே இது போல் நடக்க வாய்ப்பு இல்லை.
10. காவல்துறையில் ஒரு சிலருக்கும் தகப்பனாருக்கும் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தனிப்பட்ட விரோதமும் முரண்பாடுகளும் உண்டு என்பதால் காவல் ஆய்வாளர் அம்மாதுரை மற்றும் காவல்

உதவி ஆய்வாளர் தென்னரசு, மேலும் ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் காசி பாண்டியன் ஆகியோரின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை பொய் வழக்காக போட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எதிரியின் குடும்பத்திற்கும் தங்களும் தங்களது போலீஸ் சாரும் குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக எதிரியின் மீது பொய்யான செய்திகளை பரப்பி காவல்துறையில் கையிருப்பு சாட்சிகளை பயன்படுத்தி எதிரி மீது திட்டமிட்டு ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு போட்டுள்ளிர்கள் என்றால் சரியல்ல.

11. சாட்சிகளை சரியாக விசாரிக்காமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளிர்கள் என்றாலும் எதிரி புருஷோத்தமனை ஈரோடு மாண்புமிகு CJM நீதிமன்ற வளாகத்திற்கு வந்து நீங்கள் வந்து என்னை நேரில் கேமரா இல்லாத இடத்தில் அணுகி உடுமலைப்பேட்டை வழக்கை ஒப்புக்கொள்ளுமாறு பேசினீர்கள் என்றால் சரியல்ல இந்த குற்ற எண் , 2457/2011 இல் பதியப்பட்டு பதியப்பட்டு குற்ற அறிக்கைக்கல் செய்யப்பட்டு 31.08.2013 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு நான் 2017 இல் தான் ஈரோடு மாவட்டத்தில் பணி செய்தேன். உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் பொய் சாட்சி அமைக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.